# இலங்கை வங்கி

**உலகளாவிய அதிசிறந்த 1000 வங்கிகளுள் ஒன்றாகவும் ஆசிய பசுபிக் பிராந்தியத்தின் 500 மிகப்பெரிய வங்கிகளில் ஒன்றாகவும் தரப்படுத்தப்பட்ட அரச வர்த்தக வங்கியும் இலங்கையின் 1ம்தர வங்கியுமாகிய இலங்கை வங்கியில் பின்வரும் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு தகைமையும் ஆற்றலும் ஊக்கமும் மாறுபட்ட சூழலில் செயலாற்றக்கூடிய தன்மையும், சிறந்த இலக்கினையும் கொண்ட நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன:**

# பதவிநிலை உதவியாளர் பயிலுநர்

## தகுதிப் பிரமாணங்கள்

➢ **இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்**

➢ **கல்வித் தகைமைகள்**

- க.பொ.த (சாதாரண தரம்) பரீட்சையில் ஒரே அமர்வில் தாய் மொழி, கணிதம் மற்றும் ஆங்கில மொழி உள்ளடங்கலாக ஆகக் குறைந்தது ஐந்து (05) பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஆறு (06) பாடங்களில் (விருப்பத்துக்குரிய பாடங்களைத் தவிர்த்து) சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**மற்றும்**

- க.பொ.த (உயர் தரம்) பரீட்சையில் ஒரே அமர்வில் மூன்று (03) பாடங்களில் (பொது ஆங்கிலம், பொது அறிவு, மற்றும் பொதுத் தகவல் தொழில்நுட்பம் தவிர்த்து) சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

➢ **ஏனைய தகைமைகள்**

- மற்றவர்களுடன் குறிப்பிடத்தக்களவில் தொடர்பினை ஏற்படுத்தும் திறனையும் தொடர்பாடல் திறனையும் கொண்டிருத்தல்.
- அர்ப்பணிப்பையும், விடாமுயற்சியினையும் வெளிப்படுத்தும் திறனைக் கொண்டிருத்தல்.
- நேர இலக்கினை நோக்கிச் செயற்படும் திறனைக் கொண்டிருத்தல்.

➢ **வயது**

- விண்ணப்ப முடிவுத் திகதியில் 24 வயது அல்லது அதற்குக் குறைவாக இருத்தல் வேண்டும்.

## விதிகள் மற்றும் நிபந்தனைகள்

- பயிற்சிக்காலம் 02 ஆண்டுகள் என்பதோடு அப்பயிற்சிக் காலப்பகுதிக்குரிய மாதாந்தக் கொடுப்பனவாக 1ஆம் வருடம் 45,000/- ரூபாயும் மற்றும் 2ஆம் வருடம் 60,000/- ரூபாயும் வழங்கப்படும்.
- இப்பதவியானது சாதாரண வங்கியியல் துறையினுள் இருப்பதுடன் (திறந்த சேவை) வங்கிச் சேவையின் பொதுவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டதாகும்.
- வங்கி திருப்தியடையும் வகையில் பயிற்சித் தேவைகளைப் பூர்த்தி செய்தவுடன் **பதவிநிலை உதவியாளர்** - I என்ற தரத்தில் நிரந்தர ஆளணியில் உறுதிப்படுத்தப்படுவர்.
- வார இறுதி/விடுமுறை நாட்களிலும் கடமை நேரத்துக்குப் பின்பும் வேலை செய்யக்கூடியவராக இருத்தல் வேண்டும்.
- வங்கியின் தேவைக்கேற்ப நாட்டினது எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்குத் தயாராகவிருத்தல் வேண்டும்

## தெரிவு முறை

போட்டிப் பரீட்சையினைத் தொடர்ந்து பட்டியற்படுத்தப்படும் விண்ணப்பதாரிகள் நேர்முகத் தேர்வின் மூலம் தெரிவு செய்யப்படுவர்.

மாவட்ட/மாகாண தேவைகளின் அடிப்படையில் தெரிவுகள் இடம்பெறும்.

பரீட்சையின் போது கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள வினாத்தாள்கள் கருத்திற்கொள்ளப்படும்.

வினாத்தாள் I – பொது அறிவு, நுண்ணறிவு மற்றும் தகவல் தொழில்நுட்பம்

வினாத்தாள் II – ஆங்கில மொழி

## விண்ணப்பிக்கும் முறை

**2021 ஜுலை 31ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர்** எமது இணையத்தளமான www.boc.lk (Careers என்ற பகுதியின் கீழ்) ஊடாக உங்களது விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கவும். சமர்ப்பித்த விண்ணப்பத்தின் ‘விண்ணப்பத் தொடர்பு இலக்கத்தை’ உங்களது எதிர்காலத் தொடர்புக்காக வைத்திருக்கவும்.

எமது இணையத்தின் Careers பகுதியின் கீழ் கொடுக்கப்பட்டிருக்கும் “Instructions to Candidates” கவனமாகப் படித்து, கொடுக்கப்பட்ட அறிவுறுத்தல்களின்படி நிகழ்நிலை விண்ணப்பப் படிவத்தை நிரப்பவும்.

மேலே கூறப்பட்ட முறையிலல்லாது வேறு ஏதேனும் முறைகளில் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

மேற்குறிப்பிட்ட தகைமைகள் இல்லாத அல்லது பிழையான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்ட எந்தவொரு விண்ணப்பமும் மேலதிக அறிவித்தலின்றி ஆட்சேர்ப்பின் எந்தவொரு கட்டத்திலும் நிராகரிக்கப்படும்.

**மனிதவளப் பிரிவு**
**இலங்கை வங்கி**
**தலைமை அலுவலகம்**
**கொழும்பு-01**

தேர்வு சம்பந்தமான ஆதரவுகளை நாடுவோர் தகைமையை இழப்பர்.
தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகளை மட்டும் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கும் உரிமை வங்கிக்கு உண்டு.

இலங்கைவங்கி
BOC
தேசத்தின் வங்கியாளர்